நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
# தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## "அரிசி, கோதுமை போல காய்கறி கொள்முதல் சாத்தியமில்லை': சரத் பவார்

First Published : 23 Feb 2011 12:35:49 AM IST



புது தில்லி, பிப்.22: காய்கறிகளை விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்து அதன் விலையை ஒழுங்குபடுத்த இயலாது என மக்களவையில் கேள்வி நேரத்தின்போது உணவுத் துறை அமைச்சர் சரத் பவார் கூறினார்.

செவ்வாய்க்கிழமை மக்களவையில் அவர் கூறியது:

"அரிசி, கோதுமை போன்ற பொருள்களை விவசாயிகளிடமிருந்து நேரடியாக அரசு கொள்முதல் செய்து விலையை ஒழுங்குபடுத்தி வருவது போல காய்கறிகளையும் கொள்முதல் செய்து விலையைக் கட்டுபடுத்துவது என்பது சாத்தியமில்லை.

காய்கறி, பழம் போன்றவை அழுகும் தன்மையுடையவை. எனவே இவற்றை கொள்முதல் செய்வது, நிர்வகிப்பது, விலைகளை ஒழுங்குபடுத்துவது என்பது இயலாது.

கடந்த ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் வெங்காயத்தின் விலை கடுமையாக உயர்ந்ததற்கு காரணம், மகாராஷ்டிரம், குஜராத், மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களில் பருவம் தப்பி பெய்த மழையாகும். ஆனால், வெங்காயம் உற்பத்தியாகும் மாநிலங்களில் இப்போது விலை கடுமையாக வீழ்ச்சி கண்டுள்ள நிலையில் விவசாயிகள் தங்கள் விளைபொருளுக்கு சரியான விலை கிடைக்காமல் தவிக்கிறார்கள். எனவே ஏற்றுமதித் தடையை நீக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்று சரத் பவார் மக்களவையில் கூறினார். வெங்காயத்தில் ஏற்பட்டதைப் போல பிற காய்கறிகளின் விலைகளில் கடுமையான ஏற்றத் தாழ்வு காணும்போது, விவசாயிகள் நிலையை சமாளிக்கும் வகையில், விலை ஒழுங்குபடுத்தும் நிதியம் உருவாக்கப்படுமா? என்ற கேள்விக்கு, அது போன்ற திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்றார் அவர்.

## மார்க்கெட் கமிட்டியை கண்டித்து விவசாயிகள் மறியல்

First Published : 23 Feb 2011 08:53:51 AM IST

விருத்தாசலம், பிப். 22: விருத்தாசலம் ஒழுங்குமுறைக் கூடத்தில் வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள் மழையில் நனைந்தன. இதைத் தொடர்ந்து விவசாயிகள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

÷விருத்தாசலத்தில் தமிழ்நாடு அரசு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் இயங்கி வருகிறது. விருத்தாசலம், கம்மாபுரம், சேத்தியாத்தோப்பு, பெண்ணாடம், திருமுட்டம் (ஸ்ரீமுஷ்ணம்), வேப்பூர், மங்கலம்பேட்டை, ஊமங்கலம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து கம்பு, கேழ்வரகு, வரகு, மணிலா, நெல், உளுந்து உள்ளிட்ட பொருள்களை விவயாயிகள் எடுத்து வந்து விற்பனை செய்வார்கள்.

÷இதில் நாளொன்றுக்கு 10 ஆயிரம் மூட்டை அளவில் அனைத்து விவசாய பொருள்களும் விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு விற்பனைக்காக வரும். தற்போது நெல் அறுவடை காலம் என்பதால் நாளொன்றுக்கு 5 ஆயிரம் மூட்டை அளவில் நெல் வரத்து வந்து கொண்டிருக்கின்றது. இதில் ஆரணி, புதுச்சேரி, கள்ளக்குறிச்சி உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வியாபாரிகள் நெல் உள்ளிட்ட வேளாண் பொருள்களை வாங்கிச் செல்வார்கள்.

÷இந்நிலையில் வியாபாரிகள் வாங்கிச் செல்லும் பொருள்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூட கட்டடங்களிலேயே வைத்து செல்வதாக விவசாயிகள் கூறுகின்றனர். இதனால் விவசாயிகள் கொண்டுவரும் நெல் உள்ளிட்ட பயறு வகைகளை ஒழுங்குமுறை விற்பனைக் கூட திறந்த வெளி இடங்கள் மற்றும் களங்களில் வைக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

÷இந்நிலையில் விருத்தாசலத்தில் செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட திடீர் மழையால் களம், திறந்தவெளி இடங்களில் வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள் மழையில் நினைந்தது. மழையில் நினைந்ததால் குறைந்த விலைக்கு வியாபாரிகள் நெல் எடுப்பார்கள் என கேள்விப்பட்டதாகக் கூறி விவசாயிகள் விருத்தாசலம் கடலூர் சாலையில் மறியலில் ஈடுபட்டனர்.

÷இதுகுறித்து தகவலறிந்த வட்டாட்சியர் சரவணன் விவசாயிகளிடம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறியதைத் தொடர்ந்து விவசாயிகள் கலைந்து சென்றனர்.

÷ஆலிச்சிக்குடி: ஆலிச்சிக்குடி கிராமத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்கின் நேரடி நெல் கொள்முதல் நிலையம் வாடகை இடத்தில் செயல்பட்டு வருகிறது. ஆலிச்சிக்குடி, இளமங்கலம், சாத்துக்கூடல், உச்சிமேடு, தீவளூர் உள்ளிட்ட பகுதி விவசாயிகள் இந்த கிடங்கில் நெல் விற்பனை செய்ய வருவார்கள்.

÷இந்நிலையில் நாளொன்றுக்கு 850 மூட்டைகள் வரை மட்டுமே அரசு கொள்முதல் செய்து வருகிறது. ஆனால் நெல் வரத்து அதிகமாக இருப்பதால் 10 நாள்களுக்கும் மேலாக 10 ஆயிரம் மூட்டைகள் அளவில் கிடங்கு அருகில் வைக்கப்பட்டுள்ளது.

÷இந்நிலையில் திடீர் மழையால் கிடங்கு அருகில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பெரும்பாலான நெல் மூட்டைகள் மழையில் நனைந்தது. இதனால் ஆத்திரமடைந்த அப்பகுதி விவசாயிகள் நெல் ஏற்ற வந்த லாரியை முற்றுகையிட்டனர். பின்னர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறியதைத் தொடர்ந்து விவசாயிகள் கலைந்து சென்றனர்.

÷இதுகுறித்து விவசாயிகள் தெரிவித்தது: கஷ்டப்பட்டு உழைத்து பாடுபட்டு நெல்லை விற்பனை செய்ய எடுத்து வருகிறோம். விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விவசாயிகள் வைக்க கட்டப்பட்ட இடத்தில் வியாபாரிகள் நெல் உள்ளிட்ட பொருள்களை வைத்து விடுகின்றனர்.

÷இதனால் நாங்கள் களம் மற்றும் கட்டாந்தரையில் வைக்க வேண்டிய நிலை உள்ளது. வெளியில் வைத்தாலும் பரவாயில்லை என்று வைத்திருந்தோம். ஆனால் எதிர்பாராத விதமாக வந்த மழையால் நெல் மூட்டைகள் எல்லாம் மழையில் நனைந்து விட்டது. கிரிக்கெட் விளையாடும் போது மழை வந்தால் ஆடுதளத்தை மூடுவதற்கு பாய் விரிக்கின்றனர். ஆனால் நாட்டின் முக்கியத் தேவையான உணவுப் பொருளை பாதுகாக்க ஒன்றும் இல்லை என வேதனையோடு தெரிவித்தார்.

÷ஆலிச்சிக்குடி விவசாயி தெரிவித்தது: வாடகை இடத்தில் இந்த கொள்முதல் நிலையம் உள்ளது. பள்ளமான இடத்தில் இருக்கிறது. இந்நிலையில் மழை பெய்ததால் மூட்டைகள் எல்லாம் நனைந்து விட்டது. எனவே மண் அடித்து உயரமான இடத்தில் வைக்கவும், அதிகமான எண்ணிக்கையில் நெல் மூட்டைகளை எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

÷எனவே அரசு மேற்கண்ட குறைகளை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே வியாபாரிகளின் கோரிக்கையாகும்.

**விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் ஒத்திவைப்பு**

First Published : 23 Feb 2011 09:06:53 AM IST

திருவள்ளூர், பிப் 22: வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் மார்ச் மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் அறிவித்துள்ளார்.

÷திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் கூட்டம் மாதம் தோறும் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெறுவது வழக்கம். இம்மாதத்திற்கான கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை (25.2.11) அன்று நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் அறிவித்திருந்தார்.

÷இந்நிலையில் தவிர்க்க முடியாத அலுவலர் பணி காரணமாக விவசாயிகள் குறை தீர்வு நாள் கூட்டம் மார்ச் மாதம் இரண்டாவது வாரத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**நெல்லையில் காய்கனிகளின் விலை குறைந்தது**

First Published : 22 Feb 2011 12:52:04 PM IST

திருநெல்வேலி,பிப்.21: திருநெல்வேலியில் உள்ள காய்கனி மார்க்கெட்டுகளில் காய்கனிகளின் விலை குறைந்துள்ளது.

பருவமழை சரியாகப் பெய்யாததன் காரணமாகவும், பொங்கல், கோயில் திருவிழாக்கள், முகூர்த்தங்கள் உள்ளிட்டவை காரணமாகவும் ஜனவரி மாதம் காய்கனிகளின் விலை மிகவும் உயர்ந்து காணப்பட்டது.

ஒரு முருங்கைகாய் ரூ.20 வரை விற்கப்பட்டது. அதேவேளையில் பல்லாரி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதால், அதன் விலையும் மிகவும் உயர்ந்தது. இதேபோல அனைத்துக் காய்கனிகளின் விலையும் உயர்ந்து காணப்பட்டது.

தை மாதம் முடிந்து, மாசி மாதம் பிறந்துள்ள நிலையில் காய்கனிகளின் விலை வேகமாக குறையத் தொடங்கியுள்ளது. குறிப்பாக உருளைக்கிழங்கு, பல்லாரி, வெங்காயம், முட்டைகோஸ், கத்தரிக்காய், தக்காளி, கேரட், காலிபிளவர், சீனி அவரைக்காய், வெண்டைக்காய் உள்ளிட்டவற்றின் விலை ரூ.5-ல் இருந்து ரூ.20 வரை குறைந்துள்ளது. சில காய்கனிகளின் விலை மட்டுமே குறையாமல் உள்ளது.

காய்கனிகளின் வரத்து அதிகமாக இருப்பதே விலை குறைவுக்கு காரணம் என வியாபாரிகள் கூறுகின்றனர்.

""திருநெல்வேலிக்கு ஒரு நாளைக்கு 15 லாரிகளில் மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திர மாநிலங்களில் இருந்து பல்லாரி வந்து கொண்டிருந்தது. வெளிநாடுகளுக்கு பல்லாரி ஏற்றுமதி செய்யப்பட்டதால், கடந்த இரண்டு மாதங்களாக தினமும் 5 லாரி பல்லாரிகூட வரவில்லை. இதன் காரணமாக பல்லாரியின் விலை வரைமுறையின்றி உயர்ந்தது.

மீண்டும் கடந்த இரு வாரங்களாக தினமும் 15 லாரி முதல் 20 லாரிகள் வரை பல்லாரி திருநெல்வேலிக்கு வருகிறது. இதனால், அதன் விலை குறையத் தொடங்கியுள்ளது. பல்லாரியின் விலை மேலும் குறையும் வாய்ப்பு உள்ளது'' என்றார் காய்கனி மொத்த வியாபாரி ஒருவர்.

மாசி மாதம் பெரிய அளவில் பண்டிகையோ, முகூர்த்தங்களோ இல்லை என்பதால், காய்கனிகளின் விலை மேலும் குறையும் எனவும் அவர் தெரிவித்தார்.

**நத்தம் பகுதியில் பலத்த மழை**

First Published : 22 Feb 2011 09:43:16 AM IST

திண்டுக்கல், பிப். 21: நத்தத்தில் பலத்த மழை காரணமாக, இந்திய கிரிக்கெட் வீரர் வி.வி.எஸ். லட்சுமண் பங்கேற்கவிருந்த நிகழ்ச்சி, செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் என்.பி.ஆர். கல்விக் குழுமத்தின் சார்பில், என்.பி.ஆர். பொறியியல் கல்லூரியில் திங்கள்கிழமை கிரிக்கெட் வீரர் வி.வி.எஸ். லட்சுமண் விளையாட்டு விழாவில் கலந்துகொண்டு பேசவும், விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில், திடீரென மாலை 3.30 மணி அளவில் நிகழ்ச்சி ஆரம்பிக்க இருந்த நேரத்தில் பலத்த மழை பெய்யத் தொடங்கியது.

சுமார் 2 மணி நேரத்துக்கும் மேல் மழை நீடித்ததால், நிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, விழா மேடையில் இருந்த கிரிக்கெட் வீரர் லட்சுமண் செவ்வாய்க்கிழமை தேனி கல்லூரி ஒன்றில் நடைபெற உள்ள நிகழ்ச்சிக்காக கிளம்பிச் சென்றார்.

இதைத் தொடர்ந்து, லட்சுமணிடம் கல்லூரி நிர்வாகத்தினர் செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர்.

இதற்கு அவர் ஒப்புதல் அளித்ததாக, என்.பி.ஆர். கல்விக் குழுமச் செயல் அலுவலர் அழகப்பன் தெரிவித்தார்.

**நெல் விதைப் பண்ணை விவசாயிகள் விதை சுத்திகரிப்பு செய்ய வலியுறுத்தல்**

First Published : 22 Feb 2011 09:02:26 AM IST

விருதுநகர், பிப். 21: விருதுநகர் மாவட்டத்தில் நெல் விதைப் பண்ணை விவசாயிகள் கவனமாக விதை சுத்திகரிப்புச் செய்ய வேண்டும் என விதைச் சான்று உதவி இயக்குநர் நாராயண பிரசாத் வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

நெல் விதைப் பண்ணைகளில் அறுவடை செய்து களத்தில் உலர்த்தும்போது பிற நெல் கலந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நன்கு உலர்த்திய பின்னர் தூசிகள் மற்றும் பதர்களை நீக்கி விதைக் குவியலை சீரான எடையில் புதிய சாக்குகளில் வைக்க வேண்டும்.

இக்குவியலை விதைச் சான்று அலுவலர் ஆய்வு செய்த பின்னரே சுத்திகரிப்பு நிலையம் கொண்டு செல்ல வேண்டும். அறுவடை செய்த நாளில் இருந்து 3 மாதத்திற்குள் குவியலை சுத்திகரிப்புப் பணிக்குக் கொண்டு வரவேண்டும்.

அதில் பிற ரக விதைகள் இல்லாத குவியலே விவசாயிகள் உபயோகிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படும். அதையடுத்து சுத்தம் செய்து முடித்த பின்னர் விதைச் சான்றுத் துறையின் அங்கீகாரம் மற்றும் அனுமதிக்கப்பட்ட விவரங்கள் அச்சிட்ட புதிய சாக்குகளில் சேகரித்து ஈய முத்திரை இடப்படும்.

இப்பணியின்போது மூன்று எண்ணத்தில் விதை மாதிரிகள் 400 கிராம் அளவில் எடுக்கப்படும். இவற்றில் ஒரு மாதிரி சுத்திகரிப்பு நிலையத்தில் இருப்பு வைக்கப்படும். ஒரு மாதிரி விதைச்சான்று உதவி இயக்குநர் அலுவலகத்தில் இருப்பு வைக்கப்படும். மற்றொரு மாதிரி மட்டுமே விதைப் பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

விதைப் பரிசோதனை நிலையத்தில் முளைப்புத் திறன், புறத்தூய்மை, ஈரப்பதம், மற்றும் பிற ரக விதைகள் குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். இவற்றில் தேர்ச்சி பெறும் விதைக் குவியல்களுக்கு மட்டுமே சான்று அட்டைகள் பொருத்தப்படும்.

அதன் பின்புதான் வேளாண்மை விரிவாக்க மையம் மூலமாகவோ அல்லது தனியார் விதை விற்பனை நிலையம் மூலமாகவோ விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட வேண்டும்.

எனவே, நெல் விதைப் பண்ணைக்குப் பதிவு செய்த விவசாயிகள் மேற்காணும் வழிமுறைகளைப் பின்பற்றி உரிய காலத்தில் சுத்திகரிப்புப் பணியை மேற்கொண்டு பயனடையுமாறு விதைச்சான்று உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

தினமலர்

**ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2011,00:00 IST

**நெற்பயிரோடு மீன்வளர்ப்பு**: நெல் வயல்களில் நாற்று நட்டது முதல் அறுவடை வரை நெற்பயிரோடு மீன்வளர்த்தல் முறை, அறுவடைக்குப் பின் மழைக்காலங்களில் பெருமளவு நீர் வயல்களில் நிரம்புவதால் அவற்றில் மீன் வளர்த்தல் மற்றொரு முறை. பொதுவாக வயல்களில்

நெல், உளுந்து, கேழ்வரகு என்ற பயிர் சுழற்சியையே நாம் அறிவோம். ஆனால் வெவ்வேறு இடங்களில் சூழ்நிலைக்கேற்ப ஒரு முறை நெல்லும் மறுமுறை மீனும் வளர்த்து நிலத்தையும் நீரையும் முழுமையாகப் பயன்படுத்துதல் ஒரு புதுமுறை சுழற்சி எனலாம். இம்முறை பயிர் - மீன் சுழற்சியால் அதிக பயன் அடைவதோடு பயிர்களை தாக்கும் பூச்சி, புழுக்களையும் களைகளையும் கட்டுப்படுத்தலாம்.

நெல்வயல்களில் வளரும் மீன்கள் நிலத்தை தொடர்ந்து கிளறிவிடுவதோடு, மீனின் கழிவில் நிறைந்துள்ள தழைச்சத்து பயிர்களுக்கு தொடர்ந்து கிடைக்கின்றது. நெல்மணியோடு விலை குறைந்த, புரதம் நிறைந்த மீனும் கிடைப்பதால் புரதப்பற்றாக்குறை நீங்குகிறது. நெல்லையும் மீனையும் சேர்த்து வளர்க்க, விளையும் வயல்களில் குறைந்தது நான்கைந்து மாதங்களாவது நீர் தேங்கியிருக்க வேண்டும். இவ்வகை வயல்களின் வரப்புகள் உறுதியாகவும் உயரமாகவும் இருப்பது அவசியம். வயலின் பள்ளமான பகுதிகளில் ஆழமான குளங்களும் அவற்றிலிருந்து பிரிந்து செல்லும் பல வாய்க்கால்களும் அமைத்தால் வயலின் நீர் குறைந்து தரைமட்டத்தை அடையும் காலங்களில் மீன்கள் மடிந்துபோகாமல் வாய்க்கால்கள் வழியாக குளத்தை வந்தடைந்து பிழைக்கக்கூடும். வாய்க்கால்கள் 50 செ.மீ. அகலமும், 30 செ.மீ. ஆழமும் கொண்டதாய் இருக்க வேண்டும். வயலுக்கு நீர் பாய்ச்சும் வழியின் மூலமாகவும், வெளியேறும் வழி மூலமாகவும் மீன்கள் தப்பிச்செல்வதை தடுக்க வலைகளைப் பொருத்த வேண்டும்.

மேற்கூறிய வசதிகளைக் கொண்ட வயல்களில் உறுதியான வேர்களுடன் குறைந்த வெப்பத்தையும் தேங்கி நிற்கும் நீரையும் தாங்கக்கூடிய காலப்பயிர்களை பயிரிடலாம். நெற்பயிரின் நடவுக்குப் பின் விரலளவு மீன் அல்லது அதற்கு மேல் வளர்ந்த மீன்களை நெல்வயல்களில் எக்டேருக்கு 2000 வரை இருப்பு செய்யலாம். இத்தகைய பயிர் வகைகளை பயிரிட்டால் நான்கைந்து மாதங்களில் எக்டர் ஒன்றுக்கு 500 கி.கி. மீன்கள் கிடைக்கிறது. இம்முறையில் நெற்பயிர்களுடன் சாதாக்கெண்டை, திலோப்பியா, விரால் போன்ற மீன் இனங்களையும் நன்னீர் இறால்களையும் வளர்த்தெடுக்கலாம்.

**நிலவாழ் தாவரங்கள் - மீன்வளர்ப்பு:** காய்கறி, பழமரங்கள், தென்னைமரம், புல் வகைகள் மற்றும் பூச்செடிகள் ஆகியவைகளை குளக்கரையின் மேல் வளர்க்கலாம். இப்பயிர் வகைகள் உணவாகவும், உரமாகவும் பயன்படுகிறது.

**கால்நடைகளோடு மீன்வளர்ப்பு:** மீன்களை கால்நடைகளுடன் கூட்டமாக சேர்த்து பண்ணைகளில் வளர்க்கலாம். இம்முறையில் ஆடு, மாடு, குதிரை மற்றும் பன்றி போன்றவைகளின் கொட்டகைகளை மீன்வளர்க்கும் குளங்களின் கரைகளிலோ அல்லது குளத்தின் நடுவிலோ அமைத்திடலாம். குளத்தின் நடுவில் கொட்டகை அமைக்கும் போது கால்நடைகளை உள்ளே அடைக்கவும், வெளியே கொண்டுவரவும் பலகையினால் பாலம் அமைத்தல் அவசியம். ஒரு எக்டேர் குளத்திற்கு 2-3 பசுக்கள் அல்லது எருமைகள் போதுமானது. குளத்தில் எக்டேருக்கு 4000 மீன் குஞ்சுகளுக்கு மேல் இருப்பு செய்யலாம். அதனால்

கால்நடைகளின் கழிவுகள் மீன் வளர்ப்புக் குளத்தில் நேராக கலந்து உரமாக பயன்படுகின்றன. மீன் உற்பத்திக்கென்றே தனியாகக் குளங்களில் உணவிடவோ அல்லது உரமிடவோ அவசியம் ஏற்படாது.

**கோழியுடன் மீன்வளர்ப்பு:** கோழியுடன் மீன் வளர்ப்பில் கோழிக்குடிலை குளத்தின் தண்ணீர் மட்டத்திற்கு மேல் சுமார் 5 அடி உயரத்தில் அமைக்கலாம். குளத்தின் மேல் குடில் அமைக்க சிரமமாக இருப்பின் அதன் அருகாமையில் இருக்கும் நிலப்பரப்பிலும் அமைக்கலாம். கோழியிலிருந்து கிடைக்கும் எச்சம் நேரடியாக குளத்தில் விழுந்து மீன்களுக்கு உணவாகவும், குளத்திற்கு உரமாகவும் பயன்படுகிறது. ஒரு எக்டேர் பரப்பளவுள்ள குளத்தில் 300 கோழிகளையும், 4000 முதல் 5000 மீன் குஞ்சுகளையும் வளர்த்திடலாம். ஒரு முட்டைக்கோழி வருடத்திற்கு 250 முதல் 300 வரை முட்டைகளை இடும். இம்முறையில் 4 டன் மீன் உற்பத்தியைப் பெறுவதுடன் 400-500 கி.கி. வரை கோழி இறைச்சியும் பெற முடியும்.

பா.கணேசன், எம்.எப்.எஸ்சி.,வெ.பழனிச்சாமி, பிஎச்.டி.,வேளாண் அறிவியல் நிலையம், குன்றக்குடி.

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2011,00:00 IST

**ஆடுகளில் நீலநாக்கு நோய் - தடுக்கும் வழிமுறைகள்:** நீலநாக்கு நோய் எல்லா ஆடுகளுக்கும் வரும் என்றாலும், செம்மறி ஆடுகளில்தான் அதிக சேதத்தை ஏற்படுத்தும். நம்முடைய ஆட்டு மந்தையையும், பொருளாதாரத்தையும் காக்க வேண்டுமாயின், இந்நோய் குறித்த விளக்கங்களை தெரிந்துகொள்வது அவசியம்.

**நோயின் அறிகுறிகள்:** நோயுற்ற ஆடுகளில் உடல் வெப்பநிலை உயர்ந்து (காய்ச்சல்) அவை நடுக்கத்துடன் காணப் படும். உடல் வெப்பநிலை 105 முதல் 107 டிகிரி பாரன்ஹீட் வரை இருக்கும். மூக்கின் வழியாக தண்ணீர் போன்ற திரவம் ஒழுகும். இத்திரவமானது பின்னர் 2-3 தினங்களில் சளியாக மாறும். மூக்குச்சளி பின்னர் காய்ந்து கட்டியாகி நாசித் துவாரங்களை அடைத்துவிடுவதால் ஆடுகள் மூச்சுவிட சிரமப்படும். வாயின் உட்பகுதி, ஈறுகள், நாக்கு, நாசித் துவாரங்களின் உட்பகுதிகளில் புண்கள் காணப்படும். நாளடைவில் நாக்கு வீக்கம் கண்டு வாயின் வெளிப்பகுதியில் நீண்டு ""நீலநிறமாக" மாறிவிடும். காதுமடல், கழுத்து, தாடை மற்றும் உதட்டுப்பகுதியில் வீக்கம் காணப்படும். கால்களில் குளம்புகளுக்கு சற்று மேல் கரோனட்டின் உட்பகுதியில் வீக்கம் ஏற்படுவதால் ஆடுகள் வலியுடன் நொண்டி நடக்கும். கழுத்துப்பகுதி பாதிக்கப் படுவதால் ஆடுகள் கழுத்தினை வளைத்து ஒரு பக்கமாக இழுத்து காணப்படும். பாதிக்கப்பட்ட ஆடுகளில் ரத்தக்கழிச்சலும் காணப்படும்.

**நோயினால் ஏற்படும் இழப்பு:** செம்மறி ஆடுகளில் பெரும் இழப்பை உண்டுபண்ணும் நோய்களில் நீலநாக்கு நோய் முக்கியமான ஒன்றாக கருதப்படுகிறது. இதில் 20-70 சதவீதம் வரை இறப்பு நேரிட வாய்ப்பு உண்டு. நோய் கண்ட ஆடுகளில் தசைகள் பாதிக்கப்படுவதால் தசைகளின் தரம் முற்றிலுமாக குறைந்து ஆட்டு இறைச்சியின் எடை பெரிதும் குறைந்துவிடும். சினை ஆடுகளில் கருச்சிதைவு ஏற்படும். சில சமயம் பிறவி குறைபாடுகளு டன் குட்டி பிறப்பதால் அதுவே மறைமுக மாக பெரும் இழப்பை உண்டாக்கிவிடும்.

**தடுப்பு முறைகள்:** இந்நோய்க்கு தற்சமயம் ""தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்" தடுப்பூசி மருந்தினை தயாரித்துள்ளது. முறையாக அணுகினால் தடுப்பூசியினை நாமும் பெற்று பயனடையலாம். மேலும், நோயைத் தவிர்க்க கீழ்க்கண்ட பராமரிப்பு முறைகளை பின்பற்ற வேண்டும்.

* நோய் கண்ட ஆட்டினை தனியே பிரித்து நன்கு பராமரிக்க வேண்டும். மேய்ச்சலுக்கு விடக்கூடாது.

* நோய்கண்ட ஆடுகள் தீவனம் உண்ணமுடியாமல் இருப்பதால் அவைகளுக்கு அரிசி, கம்பு, கேழ்வரகு ஆகியவற்றின் கஞ்சியினை நீர்ஆகாரம் போன்று கொடுக்க வேண்டும்.

* வாய், நாக்கு மற்றும் கால்களில் ஏற்பட்டுள்ள புண்களை பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசல் அல்லது சாதாரண உப்பு கரைசல் கொண்டு நன்றாக கழுவ வேண்டும்.

* 100 மி.லி. கிளிசரினில் 10 கிராம் போரிக் ஆசிட் பவுடரை கலக்கி வாயில் உள்ள புண்களுக்கு தடவ வேண்டும். காலில் உள்ள புண்களுக்கு போரிக் ஆசிட் மருந்தினை வேப்பெண்ணெயில் கலந்து தடவ வேண்டும்.

* ஊசி மூலம் இந்நோய்க் கிருமிகள் பரவும் தன்மை கொண்டிருப்பதால்ஊசி மூலம் மருந்து அளிப்பதை தவிர்க்க வேண்டும்.

* பூச்சிகள் மூலம் இந்நோய் பரவுவதால், பூச்சி மருந்தினைப் பயன்படுத்தி தடுக்க வேண்டும்.

* கால்நடை மருத்துவரின் ஆலோசனையின்படி சல்பா, டெட்ராசைக்ளின் போன்ற மருந்தினை மூன்று நாட்களுக்கு தொடர்ந்து கொடுக்க வேண்டும். (தகவல்: ரா.தங்கதுரை, வீ. தவசியப்பன், வெ.பழனிச்சாமி, வேளாண் அறிவியல் நிலையம், குன்றக்குடி-630 206)-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

## அறிவியல் ரீதியான ஆடு வளர்ப்பு ஒரு வெற்றிக்கதை

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2011,00:00 IST



என் பெயர் ஐ.நாசர். நான் கோவை மாவட்டத்தில் கோட்டைப்பாளையம் கிராமத்தில் கரூர்வாலா ஆட்டுப்பண்ணை என்ற பெயரில் கடந்த இரண்டு வருடங்களாக அறிவியல் ரீதியாக வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகளை வளர்த்து வருகின்றேன். முறையாக பயிற்சி பெற்று சிறந்த தொழில் நுட்பங்களைக் கடைபிடித்து பண்ணையை தொடங்குவதற்கு முன்பே பல வகையான பசுந்தீவனங்களைப் பயிரிட்டு அறிவியல் ரீதியாக பராமரித்தால் ""ஆடு வளர்ப்பு" ஒரு லாபகரமான தொழில் என்பது நான் அனுபவத்தில் உணர்ந்த உண்மை.

**பசுந்தீவன உற்பத்தி:** கோட்டைப்பாளையம் கிராமத்தில் மூன்று ஏக்கர் விவசாய பூமியை குத்தகைக்கு எடுத்து கோ 4 கம்பு நேப்பியர் ஒட்டுப்புல், கோ.எப்.எஸ்.29 தீவனச் சோளப்பயிர், வேலி மசால், குதிரைமசால் மற்றும் அகத்தி போன்ற பசுந்தீவனங்களைப் பயிரிட்டேன். ஆடுகளுக்கு தேவைப்படும் பசுந்தீவன அளவை கணக்குப்போட்டு, சிறிய சிறிய பாத்திகளை அமைத்து பசுந்தீவனங்களை முறையாகப் பயிரிட்டு வளர்ப்பதால் ஆண்டு முழுவதும் பசுந்தீவனப் பற்றாக்குறை ஏற்படுவது இல்லை.

**விற்பனை வழிமுறைகள்:** நான் வியாபாரிகளுக்கு ஆடுகளை அறுப்பதற்கு விற்பனை செய்வதற்கு முன்பே எனது ஆடுகளை எடைபோட்டு, அதிலிருந்து வெட்டிய உடல் எடை எவ்வளவு கிடைக்கும் என்று கணக்குப்போட்டு என்னுடைய ஆட்டின் மதிப்பை தெரிந்துகொண்டு விலை நிர்ணயம் செய்துகொள்வேன். பிறகு வியாபாரியிடம் விற்பனை செய்யும்போது நான் நிர்ணயித்த விலைக்குக் குறைவாக ஆடுகளைக் கொடுக்க மாட்டேன். இவ்வாறு ஆடுகளை விற்பனை செய்வதால் அதிக லாபம் கிடைக்கிறது. மேலும் உயிருடன் ஆடுகளை விற்பதைவிட அவற்றை இறைச்சியாக மதிப்பூட்டி விற்பனை செய்யும்போது மேலும் அதிக லாபம் கிடைக்கும் என்பதை உணர்ந்து ஆடுகளை அறுக்க ஒரு இடத்தை ஏற்படுத்தி, போதிய வசதிகளைச் செய்து, தேவைப்படும்போது, ஆடுகளை அறுத்து இறைச்சியாகவும் விற்பனை செய்கிறேன்.

**மேலும் ஆட்டுப்பண்ணை ஆரம்பிக்க ஆர்வமுள்ள பண்ணையாளர்கள் கீழ்க்காணும் சில முக்கிய விபரங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.**

* ஆட்டுப்பண்ணை தொடங்கும் பண்ணையாளரே அந்தப் பண்ணையின் முதல் வேலையாளாக

இருக்க வேண்டும்.

* ஆட்டுப்பண்ணை தொடங்க முதலில் முறையான பயிற்சி அவசியம்.

* பசுந்தீவன உற்பத்தியில் முக்கிய கவனம் செலுத்தி அதிக அளவு பயறுவகை மற்றும் மரவகைப் பசுந்தீவனங்களைப் பயிரிட வேண்டும்.

* உயர்ந்த இனக்கிடாய்களையும், பண்ணை முறையில் வளர்க்கப்பட்ட ஆடுகளையும் தேர்வு செய்து, வாங்கி, பண்ணையை தொடங்க வேண்டும்.

* நோய் தடுப்பு, குடற்புழு மற்றும் ஒட்டுண்ணிகள் நீக்கம் போன்ற பண்ணை நடைமுறைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

* குட்டிகளில் இறப்பைத் தடுக்க, குட்டிகள் பராமரிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

* நாம் வளர்த்த ஆட்டின் மதிப்பைத் தெரிந்துகொண்டு இடைத்தரகர்கள் மற்றும் வியாபாரிகளிடம் ஏமாறாமல் உடல் எடைக்கு ஏற்ப ஆடுகளை விற்பனை செய்தால் அதிக லாபம் கிடைக்கும்.
மேற்காணும் வழிமுறைகளை கடைபிடித்து அறிவியல் ரீதியாக ஆடுகளை வளர்த்தால் வெற்றி நிச்சயம். தொடர்புக்கு: ஐ.நாசர், கோயம்புத்தூர். 99943 82106.-கே.சத்தியபிரபா, உடுமலை.

**ஆகாயத்தாமரை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2011,00:00 IST



குளங்களில் பச்சை பசேல் என படர்ந்து கிடக்கும் ஆகாயத் தாமரையை நம்மில் பலருக்கு தெரியும். ஆனால் இந்த தாமரை விவசாயிகளுக்கு நன்மையும் தீமை யும் செய்கிறது. ஆகாய தாமரைக்கு நீரை ஆவியாக்கும் தன்மை உண்டு. தண்ணீரில் மிதக்கும் இந்த தாவரம் தண்ணீரில் படர்ந்து வளர்வதன் மூலம் தொடர்ந்து வேகமாக பரவுகிறது. மிக கனமாகவும், பசுமையான இலைகளை கொண்டிருக்கும் இந்த தாவரம் ஊதா நிறத்திலான பூக்களை கொண்டது. இதன் தண்டிலிருந்து

புறப்படும் கிளைகள் விரைவில் புதிய செடியாக பரவும்.
இந்த தாவரம் நீர் நிலைகளில் தோன்றி விரைவில் பரவும். இவை அந்த தண்ணீரை எளிதில் ஆவியாக்குவதால் குளம் குட்டைகள் விரைவில் வறண்டுவிடும். எனவே விவசாயத்திற்கு மிகவும் ஊறு விளைவிக்கும் ஓர் தாவரமாக திகழ்கிறது.
ஆகாய தாமரையில் உள் அமைப்பு மற்றும் நார் போன்ற வேர்கள் தண்ணீரில் கலந்துள்ள உலோக வடிவிலான நச்சு பொருட்கள் எளிதில் உறிஞ்சி தன்னுள் சேமித்து வைத்துக் கொள்ளும். இதன் காரணமாக தண்ணீர் மாசு கட்டுப் பாட்டிலிருந்து பாதுகாக்கப் படுகிறது. மாசு நிறைந்த தண்ணீரில் காணப்படும் உலோகங்களான ""ஈயம்'' ""அர்சனிக்'' போன்ற நஞ்சு தன்மைகளை நீக்க விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சியில் ஆகாயத்தாமரை பயன்படுகிறது.
இயற்கை எரிவாயு தயாரிக்க ஆகாயத்தாமரை பயன்படும் என்கிற விஞ்ஞான பூர்வமான உண்மை கண்டறியப் பட்டுள்ளது. கேவிஐசி எனப்படும் அரசு நிறுவனம் ஆகாயத் தாமரையிலிருந்து எரிவாயு தயாரிக்கப் பயன்படும் ""கலன்களை'' அறிமுகம் செய்துள்ளது. சாண எரிவாயு கலன்களிலிருந்து சிறிய மாறுதல்களுடன் இந்த எரிவாயு கலன்கள் வடிவமைக்கப் பட்டுள்ளது.
இயற்கை உரம் அதிக நார் தன்மை கொண்ட தண்டு பகுதிகளை ஆகாயத்தாமரை கொண்டிருப்பதால் இயற்கை அங்கக உரம் தயாரிக்க முடியும் என்பதும் நிரூபணமாகி உள்ளது. 2 முதல் 3 மாதங்களில் நன்கு மக்கும். ஆகாயத்தாமரை இயற்கை உரம் அதிக அளவில் நுண்ணூட்ட சத்துகள் கொண்டுள்ளது.
"சேப்ரோபிக் பாக்டீரியா' ஆகாயத்தாமரையை 60 நாட்களில் மக்கவைத்து சிறந்த இயற்கை உரமாக மாற்ற வல்லது. ஆகாயத் தாமரையை ஒரு களையாக, விவசாயத்திற்கு எதிராக கருதி வரும் நாம் அதன் நன்மைகளையும் புரிந்துகொள்ள வேண்டும். தொடர்புக்கு: எம்.அகமது கபீர், 61, ஆர்.கே.ஆர்.நகர், தாராபுரம், திருப்பூர்-638 656.அகமது கபீர்,வேளாண்மை ஆலோசகர்,93607 48542.

**நெல் மூட்டைகள் மழையில் நனைந்ததால் விவசாயிகள் ஆவேசம்!**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2011,00:27 IST

விருத்தாசலம் : -விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கொண்டு வந்த நெல் மூட்டைகள் மழையில் நனைந்ததால் விவசாயிகள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.
விருத்தாசலத்தைச் சுற்றியுள்ள கம்மாபுரம், ஸ்ரீமுஷ்ணம், பெண்ணாடம், வேப்பூர் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் அறுவடை செய்யும் தானியங்களை, விருத்தாசலத்தில் இயங்கி வரும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கொண்டு வந்து விற்பனை

செய்து வருகின்றனர். நெல், உளுந்து, மக்காச்சோளம் என நாள் ஒன்றுக்கு 10 ஆயிரம் மூட்டைகள் வரத்து உள்ளது. இதில் நாள் ஒன்றுக்கு சுமார் 5,000 நெல் மூட்டைகள் வரத்து உள்ளது.

விவசாயிகள் கொண்டு வரும் தானியங்களை கொள்முதல் செய்யும் வியாபாரிகள், தானிய மூட்டைகளை ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக உள்ள குடோனை ஆக்கிரமித்து அடுக்கி வைத்துக் கொள்கின்றனர். இதனால் விவசாயிகள் தாங்கள் கொண்டு வரும் தானிய மூட்டைகளை திறந்தவெளி களங்களிலேயே அடுக்கி வைக்கின்றனர். நேற்று முன்தினம் இரவு விற்பனைக்காக கொண்டு வந்த 5,000 நெல் மூட்டைகளை விவசாயிகள் அங்குள்ள திறந்த வெளி களங்களில் அடுக்கி வைத்திருந்தனர். இந்நிலையில் நேற்று காலை எதிர்பாராத விதமாக பெய்த திடீர் மழையால் நெல் மூட்டைகள் நனைந்தன.

நெல் மூட்டைகள் நனைந்ததால் குறைந்த விலைக்கே எடுக்கப் போவதாக வியாபாரிகள் கூறினர். ஆத்திரமடைந்த விவசாயிகள் விருத்தாசலம் - கடலூர் சாலையில் 9.20 மணிக்கு மறியலில் ஈடுபட்டனர். அவர்களை சமாதானம் செய்த தாசில்தார் சரவணனிடம், விவசாயிகள் தாங்கள் கொண்டு வரும் மூட்டைகளை அடுக்கி வைக்கத்தான் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் உள்ள குடோன்கள் உள்ளன. ஆனால் மூட்டைகளை வாங்கும் வியாபாரிகள் இந்த குடோன்களில் மூட்டைகளை அடுக்கி வைத்துக் கொள்கின்றனர். இதனால் விவசாயிகள் இரவு நேரங்களில் திறந்தவெளி களங்களில் அடுக்கி வைக்க வேண்டியுள்ளது. திடீர் மழை வரும்போது மூட்டைகள் நனைவது தொடர்கிறது.

திறந்தவெளி களத்தில் அடுக்கி வைக்கும் மூட்டைகளை மழையில் இருந்து பாதுகாக்க ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தார்பாய் தருவார்கள். ஆனால், இங்கு தார்பாய் கிழிந்து விட்டதாக கூறுகின்றனர்.

தற்போது நெல் மூட்டை மழையில் நனைந்ததால் விலையை குறைக்கப் போவதாக கூறுகின்றனர். விலையை குறைக்காமல் வியாபாரிகள் கொள்முதல் செய்ய வேண்டும் என விவசாயிகள் கூறினர். தாசில்தார் சரவணன் நடத்திய பேச்சுவார்த்தையில், விலையை குறைக்காமல் கொள்முதல் செய்வதாக வியாபாரிகள் கூறினர். அதனையேற்று விவசாயிகள் 9.30 மணிக்கு மறியலை கைவிட்டனர். இதனால் அப்பகுதியில் 10 நிமிடம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

ஆலிச்சிக்குடி: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு தினசரி 4,000 நெல் மூட்டைகள் வரத்து உள்ளது. ஆனால் 850 மூட்டைகள் மட்டுமே கொள்முதல்

செய்யப்படுகிறது. இதனால் கொள்முதல் செய்யப்படாத நெல் மூட்டைகளை விவசாயிகள் திறந்த வெளியில் அடுக்கி வைத்து வருகின்றனர். நேற்று முன்தினம் விற்பனைக்கு கொண்டு வந்து அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள் நேற்று காலை பெய்த மழையில் நனைந்தன. இதனால் விவசாயிகள், ஈரப்பதத்திற்காக விலையை குறைக்காமல் கொள்முதல் செய்ய வேண்டும், கொள்முதலை அதிகரிக்க வேண்டும் என வலியுறுத்தி, நெல் மூட்டைகளை ஏற்ற வந்த லாரிகளை சிறை பிடித்தனர். விலையை குறைக்காமல் கொள்முதல் செய்வதாக அதிகாரிகள் உறுதியளித்ததை ஏற்று விவசாயிகள் லாரிகளை விடுவித்தனர்.

**நெற்பயிரில் குலைநோய் தாக்குதல் தவிர்க்க அதிகாரிகள் "அட்வைஸ்'**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2011,00:32 IST

திட்டக்குடி : -மங்களூர், நல்லூர் வட்டாரங்களில் நெற்பயிரில் குலைநோய் தாக்குதலை தவிர்க்க வேளாண் அதிகாரிகள் அறிவுரை வழங்கியுள்ளனர். மங்களூர், நல்லூர் வட்டாரங்களில் வெலிங்டன் ஏரி நீர்ப்பாசன பகுதிகளில் நெற்பயிரில் குலைநோய் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதனையடுத்து வேளாண் அலுவலர் ராஜலட்சுமி, துணை வேளாண் அலுவலர்கள் டென்சிங், பரமசிவம், உதவி வேளாண்மை அலுவலர்கள் ரமேஷ், மேகநாதன், சித்ராங்கி மற்றும் விருத்தாசலம் மண்டல ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியர் செல்வராஜ், உதவி பேராசிரியர் ரவிச்சந்திரன் அடங்கிய குழுவினர் சிறுமுளை, பெருமுளை, வையங்குடி, சாத்தநத்தம், ஆதமங்கலம், மேலூர் கிராமங்களில் ஆய்வு செய்தனர்.

இதில் நெற்பயிரில் குலைநோய் இலைகளில் சிறிய கண் வடிவ புள்ளிகளாக தோன்றி பின், இலை முழுவதும் கருகியுள்ளது. வயல் முழுவதும் சுட்டெரித்தது போல காணப்பட்டது. பனிக் காலங்களில் அதிகமாக பரவும் இந்நோயை கட்டுப்படுத்திட டிரைசைக்ளசோல் ஒரு எக்டருக்கு 500 கிராம் அல்லது கார்பென்டாசிம் 250 கிராம் தெளிக்க வேண்டும். அனைத்து விவசாயிகளும் நெற்பயிரில் குலைநோய் தாக்குதலை தவிர்க்க மேற்கூறிய வழிமுறைகளை செய்ய வேண்டுமென அறிவுறுத்தியுள்ளனர்.

**திண்டிவனத்தில் சாகுபடி கருத்தரங்கம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2011,00:18 IST

திண்டிவனம் : திண்டிவனத்தில் நிலக்கடலை மற்றும் தர்பூசணி சாகுபடி கருத்தரங்கம் நடந்தது. திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையம் மற்றும் கொரமண்டல்

இண்டர்நேஷனல் நிறுவனம் இணைந்து கருத்தரங்க நிகழ்ச்சி நடத்தின. கொரமண்டல் மண்டல மேலாளர் செல்வகுமரன் தலைமை தாங்கினார். விற்பனை அலுவலர் சங்கர் வரவேற்றார். வேளாண் விஞ்ஞானி எட்வர்டு ராஜா, எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர்கள் பாலமுருகன், அன்புமணி, கொரமண்டல் துணைமேலாளர் சீனுவாசன் உட்பட பலர் பேசினர்.உர விற்பனையாளர்கள் பாண்டியன், ஏழுமலை, முருகன், அரிகிருஷ்ணன், சிறு விவசாய சங்கத் தலைவர் கடவம்பாக்கம் மணி, களப்பிரசாரகர் சிவக்குமார் மற்றும் விவசாயிகள் கலந்துக் கொண்டனர். விற் பனை அலுவலர் லட் சுமணன் நன்றி கூறினார்.

**பப்பாளி பழங்கள் விற்பனை ஜோர்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2011,01:09 IST

ஆத்தூர்: வடகிழக்கு பருவ மழையால், தர்பூசணி விளைச்சல் பாதிப்பு ஏற்பட்டதால், ஆந்திரா, கிருஷ்ணகிரியில் விளைந்துள்ள பப்பாளி பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளது. தமிழகத்தில் கடலூர், பண்ருட்டி, விழுப்புரம், ஆத்தூர், தலைவாசல், பெரம்பலூர் போன்ற பகுதிகளில் தர்பூசணி பயிர் செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதத்தில் வடகிழக்கு பருவ மழை தொடர்ந்து பெய்தது. அதனால், தர்பூசணி பயிர்கள் அதிகளவில் சேதம் ஏற்பட்டதால், கோடை கால சீஸனுக்கு பழங்கள் குறைந்தளவில் வருகிறது.

கோடையின் தாகத்தை தணிக்க தர்பூசணி பழங்கள் பற்றாக்குறையால், ஈரோடு, சத்தியமங்கலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஒசூர் மற்றும் ஆந்திராவில் விளைவிக்கப்படும் பப்பாளி பழங்களை வியாபாரிகள் வாங்கி விற்பனை செய்கின்றனர். "ருசி' மிகுந்த பப்பாளி பழங்களில் வைட்டமின் சத்துகள் அதிகளவில் இருப்பதால், பொதுமக்கள் வாங்கி சாப்பிடுகின்றனர்.

இதுகுறித்து ஆத்தூரை சேர்ந்த பப்பாளி பழ வியாபாரி அம்புரோஸ் கூறியதாவது: கோடை காலத்தில் தர்பூசணி பழங்கள் அதிகளவில் விற்பனை செய்யப்படும். இரு மாதங்களுக்கு முன், பெய்த கனமழையால் தர்பூசணி விளைச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதனால், பப்பாளி பழங்களை அதிகளவில் வாங்கி வந்து விற்பனை செய்கிறோம். ரத்தம் சுத்தம் செய்தல், மலச்சிக்கல், கண் பார்வை, ரத்தம் உற்பத்தி, சர்க்கரை நோய் குணமாக்குதல், ஆஸ்துமா போன்ற பிரச்சனைகளுக்கு பப்பாளி பழங்கள் மருந்தாக இருப்பதால், பொதுமக்கள் அதிகளவில் வாங்கி செல்கின்றனர். "அன்னபூர்ணா' ரகத்தை சேர்ந்த பப்பாளி பழங்களை கிலோ, 20 முதல் 25 ரூபாய் வரை விற்பனை செய்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

**திடக்கழிவு மேலாண் திட்டத்தில் உரம் தயாரிப்பு! எரிசாராய ஆலை கழிவு நீரை பயன்படுத்தக் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2011,00:56 IST

மோகனூர்: திடக்கழிவு மேலாண் திட்டத்தில், குப்பைகளை மக்கச் செய்ய எரிசாராய ஆலை கழிவு நீரை பயன்படுத்தினால், நல்ல சத்துள்ள உரம் கிடைக்கும் என, வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். திடக்கழிவு மேலாண் திட்டத்தை அரசு, அனைத்து டவுன் பஞ்சாயத்து மற்றும் கிராம பஞ்சாயத்துக்களில் செயல்படுத்தி வருகிறது. தரம் பிரிக்கப்பட்ட மக்கும் குப்பைகளை கொண்டு உரம் தயாரிக்கும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. திடக்கழிவு மேலாண் திட்டத்தில், குப்பைகளை மக்க வைக்க சாணக்கரைசலை பயன்படுத்துகின்றனர். குறிப்பிட்ட நாட்கள் கழித்து, அந்த குப்பைகளை சலித்து எடுத்து தூசுகளை அகற்றி, உரத்தை விற்பனை செய்கின்றனர்.

மக்கக்கூடிய திடக்கழிவுகளை, எரிசாராய ஆலை கழிவு நீரை கொண்டு மக்க செய்வதால், நுண்ணுயிர் பெருக்கும் ஏற்பட்டு கழிவுகள் வெகு விரைவில் மக்கி, ஊட்டச்சத்து நிறைந்த உரமாக பயன்படும் வாய்ப்பு உண்டு.நாமக்கல் மாவட்டத்தில், மோகனூரில் உள்ள எரிசாராய ஆலையில் தினமும், 30 ஆயிரம் லிட்டர் கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு, சர்க்கரை ஆலையில் இருந்து கிடைக்கும் "பிரஸ்மட்' கழிவை கொண்டு உரமாக்கி "பயோ கம்போஸ்ட்' என்ற பெயரில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.மேலும், உபரியாக கிடைக்கும் எரிசாராய ஆலை கழிவை, லாரிகள் மூலம் எடுத்துச்சென்று விவசாய தோட்டத்தில் மண்ணை வளமாக்க பயன்படுத்தப்படுகிறது. இக்கழிவு நீரை வயலில்கொட்டி காயவைத்து உழவு செய்கின்றனர். எரிசாராய ஆலை கழிவுகளை கொண்டு பயிர் செய்யப்பட்ட மானாவரி பயிர்களான சோளம், கம்பு, நிலக்கடலை போன்ற பயிர்களில் கூடுதல் விளைச்சல் கிடைத்துள்ளதாக, விவசாயிகள் தெரிவிக்கின்றனர். அதே நேரத்தில் எரிசாராய கழிவு நீரை வயல்களில் பயன்படுத்தவதால், நிலத்தடி நீர் மாசுபடுவதாகவும், விளை நிலங்கள் பாழ்படுவதாகவும் விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர். எனவே, எரிசாராய கழிவு நீரை திடக்கழிவு மேலாண் திட்டத்துக்கு பயன்படுத்தலாம். அதன் காரணமாக, சுற்றுச்சூழல் சீர்கேடு தவிர்க்கப்படுவதுடன், நகர குப்பைகள் விரைவாக மக்கி உரமாக பயன்படும் வாய்ப்பு உள்ளது என, வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

**பரவலாக மழை : ராகி அறுவடை பாதிப்பால் விவசாயிகள் கலக்கம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2011,00:27 IST

ஓசூர்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் விடியவிடிய திடீரென்று கன மழை பெய்தது. இதனால், அறுவடைக்கு தயரான பயிகள் சேதமடைந்து நடப்பாண்டு அடிமேல் அடி விழுந்து வருவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆண்டு முழுவதும் மிதமான தட்டவெப்ப நிலை காணப்படும். நடப்பாண்டு எப்போதும் இல்லாத வகையில் கடந்த ஆறு மாதத்திற்கு மேலாக கடும் குளிரும், பணிக்காற்றும் அடித்தது. குறிப்பாக ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை தாலுகாவில் கடும் பணிப்பொழிவால் விவசாய பயிர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. இதனால், உணவு பயிர்கள், மலர் உற்பத்தி குறைந்ததால் விவசாயிகள் நஷ்டமடைந்தனர். தற்போது, குளிர் காலம் முடிந்து கோடைகாலம் துவங்கியதை தொடர்ந்து, காலையில் பனிப்பொழிவு குறைந்து பகல் நேரத்தில் கடும் வெயில் அடித்து வந்தது. இதனால், விவசாயிகள் தற்போது முழுவீச்சில் அடுத்த போக விவசாய சாகுபடியில் பணியில் முழுவீச்சில் ஈடுப்பட்டனர். நேற்று முன்தினம் இரவு முதல் திடீரென்று மாவட்டம் முழுவதும் பரவலாக நல்ல மழை பெய்தது. குறிப்பாக தளி, சூளகிரி, தேன்கனிக்கோட்டை பகுதியில் பேய் மழை பெய்தது. இதனால், சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. மாவட்டத்தில் தளியில் அதிகப்பட்சமாக 150 மி.மீ., சூளகிரியில் 85, தேன்கனிக்கோட்டையில் 64, கிருஷ்ணகிரியில் 35.4, ஓசூரில் 22, ராயக்கோட்டையில் 21, அஞ்செட்டியில் 13 மி.மீ., மழை பெய்துள்ளது. மாவட்டத்தில்சராசரியாக 32.53 மி.மீ., மழையும் பெய்தது. தேன்கனிக்கோட்டை, ஓசூர் தாலுகாவில் தற்போது ராகி அறுவடை இறுதிக்கட்டமாக முழுவீச்சில் நடந்து வருகிறது. நடப்பாண்டு கடும் பனிப்பொழிவால் மலர், காய்கறி மற்றும் ராகி சாகுபடியில் எதிர்பார்த்த மகசூல் கிடைக்கவில்லை. குறிப்பாக ராகி மற்றும் மலர்கள் தரம் குறைவாக கிடைத்தன. யானைகள், பன்றிகள் உள்ளிட்ட வன விலங்குளால் ராகி பயிர் அதிகளவு சேதப்படுத்தப்பட்டன. தற்போது ராகி அறுவடை நடந்து வரும்நிலையில் கனமழை பெய்து அறுவடைக்காக வைத்திருந்த ராகி ஃபோர் அனைத்தும் மழையில் நனைந்தும், அடித்து செல்லப்பட்டும் சேதமடைந்தன. மேலும், அடுத்தபோக சாகுபடிக்காக உழுது பன்படுத்திய நிலங்கள் மழையால் சேதமடைந்ததால், மறுபடியும் நிலத்தை பன்படுத்த வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கடும் விரக்தியடைந்துள்ளனர். இது குறித்து ஓசூர் வேளாண்மை துறை உதவி இயக்குனர் நாகராஜ் கூறியதாவது:

தற்போது பெய்த கன மழையால் சாதகம், பாதகமும் உள்ளன. மானாவாரி பயிர்களின் மகசூல் இறுதிகட்டத்தை அடைந்து விட்டது. அதைதொடர்ந்து இறவை சாகுபடிக்காக விவசாயிகள் தயாராகி வருகின்றனர். பொதுவாக சாகுபடிக்காக நிலத்தில் தண்ணீர் தேக்கி உழவு செய்ய வேண்டும். தற்போது மழை பெய்ததால் நிலத்தில் தண்ணீர் நிற்கிறது. இதனால், மண் நன்றாக நனைத்து உலர்ந்து காணப்படும். அதனால் எளிதாக உழவு செய்து தடையின்றி விவசாயம்

மேற்கொள்ளலாம். ஒரு சில மலர், காய்கறிகள் கனமழையில் அழுகி விடும். குறிப்பாக திறந்த வெளியில் சாகுபடி செய்யப்படும் சென்டுமல்லி, ரோஜா மலர்களில் தண்ணீர் நின்றால் அழுகி விடும் தன்மை வாய்ந்தது. அதனால், பாதிப்பு வர வாய்ப்புள்ளது. பொதுவாக இந்த மழையை பயன்படுத்தி அனைத்து காய்கறிகள், ராகி பயிர் சாகபடி செய்து விவசாயிகள் பயனடையலாம்.

**எள் சாகுபடி பரப்பளவு உயர்வு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2011,00:53 IST

ஈரோடு:ஈரோடு மாவட்டத்தில் கனகபுரம், வெள்ளோடு, பூந்துறை பகுதியில் எள் சாகுபடி பரப்பு அதிகரித்து வருகிறது. தமிழகத்தில் 1.38 லட்சம் ஹெக்டேரில் எள் பயிரிடப்படுகிறது. ஹெக்டேருக்கு சராசரியாக 550 கிலோ மகசூல் கிடைக்கிறது. நன்கு பராமரிக்கும் பட்சத்தில் 1,000 கிலோ வரை மகசூல் கிடைக்கும். டிசம்பர் முதல் ஏப்ரல் வரை எள் விதைப்பு காலம்; ஜூன் மாதம் அறுவடை ஆரம்பமாகி விடும். சில விவசாயிகள் ஜூலை மாதம் வரும் மழையை நம்பி எள் விதைப்பதுண்டு. இந்தியாவில் குஜராத்தில்தான் அதிகளவு எள் சாகுபடி செய்யப்படுகிறது. இதையடுத்து தமிழகம் முன்னணி வகிக்கிறது. ஈரோடு மாவட்டத்தில் மயிலம்பாடி, அத்தாணி, பவானி, அந்தியூர் ஆகிய பகுதிகளில் அதிகளவு எள் பயிராகிறது. பூந்துறை, கனகபுரம், வெள்ளோடு பகுதியிலும் எள் சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது.

ஈரோடு வேளாண் அதிகாரி ஒருவர் கூறியதாவது:தமிழகத்தில் எள் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியில் ஈரோடு மாவட்டம் முதலிடம் வகிக்கிறது. ஈரோடு மாவட்டத்தில் 2,600 ஹெக்டேர் பரப்பளவில் எள் சாகுபடி செய்யப்படுகிறது. ஹெக்டேருக்கு மானாவாரியில் 900 கிலோ, இரவையாக 1,500 கிலோ வரையும் மகசூல் கிடைக்கிறது. வடிகால் வசதி நிறைந்த செம்மண் நிலத்தில் அதிகளவு மகசூல் கிடைக்கும். கறுப்பு எள்ளை அதிகளவு விவசாயிகள் பயிரிடுகின்றனர். வெள்ளை எள் சாகுபடி செய்தால் அதிகளவு மகசூல் கிடைக்கும்.
ஈரோடு மாவட்டத்தில் "டிஎம்வி-3' கறுப்பு எள், எஸ்.வி.பி.ஆர்-1, வெள்ளை எள் ரகங்கள் பயிரிடப்படுகின்றன. விதை மூலம் பரவும் பூஞ்சாண நோய்களை கட்டுப்படுத்த டிரைகோ டெர்மா விரிடி கிலோவுக்கு நான்கு கிராம் என்ற அளவில் கலந்து விதைத்தால், விதை நேர்த்தி கிடைக்கும். சதுர மீட்டருக்கு 11 செடிகள் இருக்குமாறு கட்டாயம் பார்த்துக் கொள்ள வேண்டும். எள் விதை எடை அதிகரிக்க ஹெக்டேருக்கு ஐந்து கிலோ என்ற அளவில் மாங்கனிஸ் சல்பேட் என்ற நுண்ணாட்ட சத்தை 20 கிலோ மணலுடன் கலந்து, விதைத்தவுடன் அல்லது பயிர் களைத்தலின் போது இட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**புதிய தொழில்நுட்பத்துடன் வேளாண்மை: கலெக்டர் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2011,00:53 IST

ஈரோடு:""ஆத்மா திட்டத்தை பயன்படுத்தி, விவசாயிகள் புதிய தொழில்நுட்பத்துடன் முன்னேற வேண்டும்," என, வேளாண் கண்காட்சியில் கலெக்டர் சவுண்டையா பேசினார்.
ஈரோடு மல்லிகை அரங்கில் வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் துவங்கியது.
கருத்தரங்கை துவக்கி வைத்து, கலெக்டர் சவுண்டையா பேசியதாவது: ஐம்பது ஆண்டுக்கு முன் விவசாயத்தின் நிலை வேறு; அன்று விவசாயத்தில் சேவை இருந்தது; இன்றிருப்பது வேறு. காலப்போக்கில் பல தொழில்கள் வந்தன. இதனால், விவசாயத்தை லாபகரமாக மாற்ற வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இல்லையென்றால் விவசாயம் இருக்காது.
மஞ்சள் லாபகரமாக உள்ளது. கரும்பு, நெல், வாழை போன்றவை லாபகரமாக இல்லை. 1,000 ஆண்டுக்கு முன் இருந்த அதே முறையில்தான் நெல் பயிரிடுகிறோம். விவசாயிகளுக்கு மூலப்பொருட்களின் விலை உயர்வால் அவர்கள் திண்டாடுகின்றனர். கூலி அவர்களுக்கு பிரச்னையாக உள்ளது. ரசாயன உரம் விலையேற்றம், விதை தட்டுப்பாடு, மின்சாரம் தட்டுப்பாடு, தொழிலாளர் பிரச்னை போன்றவற்றால் விவசாயிகள் அவதிப்படுகின்றனர்.

இதையடுத்து அரசு சார்பில், விவசாயத்தை மேம்படுத்த ஆத்மா என்ற திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. நூறு நாள் வேலை திட்டத்தில், 20 சதவீதம் பேர் கூட பணிக்கு செல்வதில்லை; எந்த வேலையும் செய்யாமல் வாழ வேண்டும்; உழைக்காமல் வாழ வேண்டும் என்ற எண்ணம் கிராம மக்களுக்கு வந்துவிட்டது. இந்த நிலையை மாற்ற நவீன கருவிகள் வேளாண்மையில் புகுத்தப்படுகின்றன. தொழில் நுட்பத்தின் பயனால், இரட்டிப்பு மகசூல் வர ஆரம்பித்துள்ளது. குறைந்த நீரில் அதிக மகசூலுக்கு, "ராஜராஜன் 1000' நெல் சாகுபடி முறையை ஈரோடு மாவட்டத்விவசாயிகள் பின்பற்றுகின்றனர். சொட்டு நீர் பாசனம் மூலம் விவசாயம் செய்யும் பணியை ஈரோடு மாவட்டம் சிறப்புடன் செய்து வருகிறது. மற்ற மாவட்டங்களை காட்டிலும் தொழில்நுட்ப அறிவை ஈரோடு மாவட்ட விவசாயிகள் உடனே ஏற்று கொள்கின்றனர்.

முன்பெல்லாம் மலை பிரதேசத்தில் மட்டுமே சில காய்கறிகள் விளைவதுண்டு. இன்று அந்த நிலை மாறி, சமவெளி பகுதியிலும் மலை காய்கள் வளர்க்கப்படுகின்றன. மண் பரிசோதனை செய்வதற்கு அந்த காலத்தில் அனைத்து மாவட்ட விவசாயிகளும், கோவை வேளாண்மை பல்கலைக் கழகத்துக்கு மட்டுமே செல்ல வேண்டியிருந்தது. இன்று ஈரோடு மாவட்டத்தில் மட்டும் 14 மண் பரிசோதனை மையம் உள்ளது. தற்போது பசுமை புரட்சி நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. குறைந்தளவு தண்ணீரை வைத்துக் கொண்டு விவசாய உற்பத்தி அதிகரிப்பதன் முயற்சியில் வெற்றி பெற்றுள்ளோம். புதிய புதிய நோய் தாக்குதல்

வரத்தான் செய்யும்; ஒவ்வொன்றையும் வெற்றி கண்டு பயணம் செய்துதான் ஆக வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

ஈரோடு வேளாண்மை இணை இயக்குனர் அக்பர் வரவேற்றார். துணை இயக்குனர் மாரியப்பன் திட்டவிளக்கவுரையாற்றினார். மூன்று நாள் நடக்கும கண்காட்சியில் பல்வேறு துறைகளின் சார்பில், விவசாயிகள் சாதனை நிகழ்த்திய மாடல்கள் வைக்கப்பட்டிருந்தன. ஐநூறுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**பீன்ஸ், தக்காளி, முள்ளிங்கி விலை சரிவு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2011,01:42 IST

திருப்பூர் : காய்கறி வரத்து நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் விலை குறைந்து கொண்டே வருகிறது. நடுத்தர மக்களுக்கு ஏற்ற வகையில் விலை இருப்பதால் மகிழ்ச்சியில் உள்ளனர்.வடக்கு உழவர் சந்தை அலுவலர் ராமலிங்கம் கூறியதாவது:திருப்பூர் சுற்றுவட்டாரத்தில் இருந்து காய்கறி வரத்து அதிகரித்து வருவதால் விலை குறைந்து கொண்டே வருகிறது. கத்தரி, கொத்தவரக்காய், மல்லித்தழை விலை உயர்ந்துள்ளது. வெண்டைக்காய், பச்சை மிளகாய், கேரட், பீன்ஸ், தக்காளி, முள்ளங்கி விலை குறைந்துள்ளது.
தக்காளி கிலோ 5; பீட்ரூட் 20; அவரை 16 முதல் 18; கத்தரிக்காய் ஐந்து ரூபாய் உயர்ந்து 30; வெண்டைக்காய் 18; புடலை 16; பீர்க்கங்காய் 20; சுரைக்காய் 10; பாகற்காய் 14 முதல் 16; கொத்தவரக்காய் 18; பூசணி 10; அரசாணி 10; பச்சமிளகாய் சம்பா 12; உருண்டை 16; சின்ன வெங்காயம் 28 முதல் 36; பெரிய வெங்காயம் 18; தேங்காய் 18; உருளை 18; கேரட் 30; பீன்ஸ் சாதா 20; புஸ் பீன்ஸ் 25; முட்டைகோஸ் 16; வெள்ளை முள்ளங்கி 8; சிவப்பு முள்ளங்கி 10; மல்லித்தழை 12; கீரை 12; புதினா 12; கறிவேப்பிலை 50; வாழைக்காய் 18; எலுமிச்சை 40; வாழைப்பழம் 18 முதல் 24; இளநீர் 12 முதல் 15 என விற்பனையானது, என்றார். பூ விலை குறைவு: பூ வியாபாரிகள் சங்க செயலாளர் சக்திவேல் கூறுகையில், ""பனி காலம் முடிந்து வெயில் துவங்கியுள்ளதால் பூ சாகுபடி வரும் நாட்களில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வரத்து அதிகரிக்கும்போது விலையும் தானாகவே குறையும். இனி, முகூர்த்த நாட்கள் குறைவு என்பதால் தேவை மிகவும் குறையும். கடந்த வாரத்தில் முகூர்த்த நாட்கள் அதிகம் என்பதால் தேவை அதிகரித்து விலை உயர்ந்து காணப்பட்டது. தற்போது விலை குறைந்துள்ளது. நேற்று, மாலை பெரியது 120; சிறியது 30 முதல் 35; பெங்களூரு மல்லிகை புதுப்பூ 80; பழையது 50 முதல் 60; அரளி 30; பட்டுப்பூ 40 முதல் 50; செவ்வந்தி 60; சம்பங்கி 80; ஜாதிமுல்லை 200; மல்லிகை 120 என விற்பனையானது," என்றார். புளி விலை உயர்வு: திருப்பூர் மார்க்கெட் வியாபாரிகள் சங்க தலைவர் பாலசுப்ரமணியம் கூறுகையில், ""சாயத்தொழில் பிரச்னை, திருப்பூரில் மளிகை

வியாபாரத்தையும் பாதித்துள்ளது. மளிகை பொருட்கள் வாங்கும் அளவு குறைந்து வருகிறது. புளிக்கு ஐந்து ரூபாய், பச்சைப்பயிறு, தட்டை பயிறு மற்றும் துவரம் பருப்பு ஆகிய பொருட்கள் இரண்டு ரூபாய் விலை உயர்ந்துள்ளது. கரும்பு சர்க்கரை கிலோ 30; சுண்டைக்கடலை 42; புளி 70 முதல் 80; வரமிளகாய் 100 முதல் 110; அஸ்கா 30; பச்சைப்பயிறு 62; பாசி பருப்பு 75; துவரம் பருப்பு 65 முதல் 72; கருப்பு உளுந்து 68; உருட்டு உளுந்து 75; தட்டை பயிறு 40, கொள்ளு 22; கடலை பருப்பு 40 ரூபாய் என விற்பனையானது,'' என்றார். தேங்காய் எண்ணெய் விலை உயர்வு: திருப்பூர் ஆயில் வியாபாரிகள் சங்க தலைவர் சந்திரன் கூறுகையில், ""தேங்காய் எண்ணெய் விலை கிலோவுக்கு எட்டு ரூபாய் உயர்ந்துள்ளது. விளக்கெண்ணெய் மற்றும் நெய் 10 ரூபாய் விலை உயர்ந்துள்ளது. பாமாயில் 66; தே.எண்ணெய் 108; க.எண்ணெய் 88; ரீபண்ட் ஆயில் 96; சூரியகாந்தி 84; நல்லெண்ணெய் ஐந்து ரூபாய் குறைந்து 85; விளக்கெண்ணெய் 150; நெய் 290 என விற்பனையாகிறது,'' என்றார்.

**நெல்லையில் விவசாயிகளுக்கு வேளாண்மைக்கருவிகள் வழங்கல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2011,00:40 IST

திருநெல்வேலி : நெல்லையில் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் விவசாயிகளுக்கு வேளாண்மைக்கருவிகள் வழங்கப்பட்டது. தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பொதுப்பிரிவினருக்கு 71 லட்சத்து 99 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு 21 லட்சத்து 7 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மானியத்தில் நவீன வேளாண்மை கருவிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சபாநாயகர் ஆவுடையப்பன் விவசாயிகளுக்கு கதிர் அறுவடை இயந்திரம் உள்ளிட்ட வேளாண்மை கருவிகளை வழங்கினார். உதவி செயற்பொறியாளர், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**நெல்லைக்கு வரத்து அதிகரிப்பு காலிபிளவர் விலை குறைந்தது**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2011,00:35 IST

திருநெல்வேலி : நெல்லையில் வரத்து அதிகரித்ததால் காலிபிளவர் விலை குறைந்துள்ளது.காய்கறிகளில் கூடுதல் விலை கொண்டது காலிபிளவர். மலைப்பகுதிகளில் விளையும் காலிபிளவருக்கு மக்கள் மத்தியில் எப்போதும் தனிமவுசு உண்டு. வழக்கமாக காலிபிளவர் பூ ஒன்று 15 ரூபாய்க்கு விற்கப்படும். கடந்த சில நாட்களாக மதுரை மார்க்கெட்டில் இருந்து நெல்லைக்கு காலிபிளவர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் நெல்லையில் குறைந்த விலையில் காலிபிளவர் விற்கப்படுகிறது. சிறிய காலிபிளவர் பூ ஒன்று 5 ரூபாய்க்கும், பெரிய பூ

ஒன்று 10, 15 ரூபாய்க்கும், நடுத்தர அளவு பூ இரண்டு 15 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. குறைவான விலை காரணமாக நெல்லை, பாளை., பகுதிகளில் காலிபிளவர் விற்பனை சூடுபிடித்துள்ளது. சாலையோரத்தில் வண்டிகளில் காலிபிளவர் விற்பனை மும்முரமாக நடக்கிறது. இதுகுறித்து வியாபாரிகள் கூறும்போது, ""தற்போது காலிபிளவர் சீசன் நடந்துவருகிறது. மதுரை மார்க்கெட்டில் இருந்து வரத்து அதிகரித்துள்ளது. நெல்லையில் ஒரு நாளைக்கு 15 மூடைகள் வரை காலிபிளவர் விற்பனை செய்யப்படுகிறது. மேலும் சில நாட்கள் காலிபிளவர் விலை குறைவாக இருக்கும்" என்றனர்.

**நெல் ஆராய்ச்சி நிலையத்துக்கு சர்வதேச ஆராய்ச்சியாளர் வருகை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2011,00:30 IST

கும்பகோணம்: ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்துக்கு அகில உலக நெல் ஆராய்ச்சி தலைமை இயக்குனர் முனைவர் ராபர்ட்சூக்குலர் வருகை தந்தார். பிலிப்பைன் நாட்டில் உள்ள அகில உலக நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ராபர்ட்சூக்லர் ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்திற்கு வருகை புரிந்தார். தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும் தெற்கு ஆசிய நாட்டின் தானிய உற்பத்தி திட்டத்தின் ஆராய்ச்சியை பார்வையிட்டு விஞ்ஞானிகளோடு கலந்துரையாடினார். நெல் உற்பத்தியில் நாம் தற்போது கண்டிருக்கும் நிறைவை பற்றியும், இதை இனிவரும் காலத்தில் கூட்டுவதற்கான ஆராய்ச்சி கூட்டு முயற்சியின் அவசியம் பற்றி கூறினார். தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ஜெயராஜ், நெல் ஆராய்ச்சியில் ஆடுதுறை நெல்ஆராய்ச்சி நிலையம் மேற்கொண்டிருக்கும் ஆராய்ச்சிகள் பற்றியும், அதை மேம்படுத்தும் புதிய திட்டங்கள் பற்றியும் கூறினார். கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலை மண் மற்றும் பயிர் ஆராய்ச்சி இயக்குனர் ஜெயராமன், வேளாண்மை பல்கலைக்கழகம் மேற்கொள்ள இருக்கும் ஆராய்ச்சி திட்டங்கள் அடங்கிய கருத்துகளை விளக்கினார். தானிய அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்படும் ஆராய்ச்சி திடல்களை பார்வையிட்ட இயக்குனர் ராபர்ட், இத்திட்டத்தில் பங்காற்றிக்கொண்டிருக்கிற ராஜேந்திரன், ரவி, ஜலாலுதீன், சரஸ்வதி, சரவணன், சசிக்குமார் போன்றோர்களிடம் ஆராய்ச்சி முன்னேற்றம் மற்றும் இடர்பாடுகளை கேட்டறிந்து அதனை தவிர்ப்பதற்கான ஆலோசனை வழங்கினார்.

**நெல் கொள்முதல் நிலையங்களை கண்காணிக்க குழுக்கள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2011,02:17 IST

மதுரை: மதுரை மாவட்டத்தில் சம்பா நெல் அறுவடை நடப்பதால், 77 இடங்களில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் துவக்கப்பட்டு உள்ளன. சன்னரக நெல் குவிண்டால் 1100, பொதுரகம் 1050 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது.

நெல்லில் ஈரப்பதம் 17 சதவீதத்திற்கு குறைவாக இருக்க வேண்டும். இவற்றை கண்காணிக்க துணை கலெக்டர் நிலையில் உள்ள மண்டல அலுவலர்கள் தலைமையில் ஏழு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கீழ்க்கண்ட அலுவலர்களிடம் புகார் தெரிவிக்கலாம். மதுரை தெற்கு: மாவட்ட வழங்கல் அலுவலர் (தலைவர்)- 94450-00335, உறுப்பினர்கள்-திருப்பரங்குன்றம் வேளாண் உதவி இயக்குனர் 94439-30379, மதுரை மேற்கு மண்டல துணை தாசில்தார் 94450-31206.மதுரை வடக்கு: ஆர்.டி.ஓ.,94450-00449, கிழக்கு வேளாண் உதவி இயக்குனர்-94421-27685, மேற்கு வேளாண் உதவி இயக்குனர்-99421-40643, மண்டல துணை தாசில்தார்கள் கூலப்பாண்டி-94450-31202, சாத்தமங்கலம்-94450-31203, கிழக்கு-94450-31205, ஒத்தக்கடை-94450-31204.மேலூர்: கலால் உதவி கமிஷனர் 0452-253 1718, வேளாண் உதவி இயக்குனர்கள் மேலூர்-94420-90537, கொட்டாம்பட்டி- 94437-94123, துணை தாசில்தார்கள் மேலூர்-94459-31207, கொட்டாம்பட்டி-94450-31208.வாடிப்பட்டி: மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர் 0452-252 9054, வேளாண் உதவி இயக்குனர்கள் வாடிப்பட்டி-94438-81927, அலங்காநல்லூர்-98654-09871, துணை தாசில்தார்கள் வாடிப்பட்டி-94450-31209, அலங்காநல்லூர்-94450-31210.உசிலம்பட்டி: ஆர்.டி.ஓ.,-94450-00450, வேளாண் உதவி இயக்குனர்கள் உசிலம்பட்டி-99650-36644, செல்லம்பட்டி-94437-96930, துணை தாசில்தார்கள் உசிலம்பட்டி-94450-31211, செல்லம்பட்டி-94450-31212.திருமங்கலம்: நிலச்சீர்திருத்த உதவி கமிஷனர்-0452-253 8391, வேளாண் உதவி இயக்குனர்கள் திருமங்கலம்-98422- 98010, கள்ளிக்குடி-94447-01450, துணை தாசில்தார்கள் திருமங்கலம்- 94450-31214, கள்ளிக்குடி-94450-31213.பேரையூர்: மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர் 0452-253 6070, வேளாண் உதவி இயக்குனர்-99424-67870, துணை தாசில்தார்கள் டி.கல்லுப்பட்டி-94450-31215, சேடபட்டி- 94450-31216.
கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) 94421-64009, கூட்டுறவு இணைப்பதிவாளர் 94429-27878, நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் 94437-74431.இடைத்தரர்கள், வியாபாரிகள் தலையிட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். வாகனம் பறிமுதல் செய்யப்படும் என கலெக்டர் காமராஜ் தெரிவித்துள்ளார்.

**வெங்காயம் விற்க "நல்ல நேரம்":வேளாண் பல்கலை கணிப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2011,22:14 IST

கோவை : "சின்ன வெங்காயத்தை இருப்பு வைக்காமல் உடனடியாக விற்றால் அதிக லாபம் கிடைக்கும்' என வேளாண் பல்கலை தெரிவித்துள்ளது.கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலை அறிக்கை:வெங்காய உற்பத்தி 2001ல் 4.52 லட்சம் எக்டேரிலிருந்து 2010ல் 7.57 லட்சம் எக்டராக அதிகரித்துள்ளது. வெங்காய சாகுபடி தமிழகத்தில் 5 சதவீதம் மட்டுமே. இதில் 70 சதவீதம் சின்ன வெங்காயமும், 30 சதவீதம் பெரிய வெங்காயமும் பயரிடப்படுகிறது. இந்தியாவில் 40 சதவீதம் கோடையிலும், மீதி குளிர்காலத்திலும் உற்பத்தி செய்யப்படுகிறது. பிந்தைய கரீப் பருவ வெங்காய வரத்து ஜனவரி மத்தியில் துவங்கி மார்ச் வரை நீடிக்கும். ரபீ பருவ வெங்காய சாகுபடி நாற்று நடவு பணி, வெங்காய உற்பத்தி செய்யும் மாநிலங்களில் முடிந்து விட்டது. இதன் வரத்து மார்ச் மத்தியில் துவங்கும். ஏற்றுமதி தரம் வாய்ந்த வெங்காயம் ரபி பருவத்தில் அதிகம் உற்பத்தியாகிறது. சமீபத்தில் ஏற்பட்ட வெங்காய விலை ஏற்றத்தால், காலவரையின்றி ஏற்றுமதி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் பெரிய வெங்காயத்தின், இருப்பு வைக்கும் தன்மை குறைவு. சின்ன வெங்காயம் மட்டுமே அதிகம் உற்பத்தி செய்கின்றனர். சின்ன வெங்காயம் லாபம் தரக்கூடிய பயிர் என்பதால், குறிப்பிட்ட பருவம் என்றில்லாமல் அனைத்து பருவத்திலும் பயிரிடப்படுகிறது. தற்போது பெரம்பலூர், திண்டுக்கல், தூத்துக்குடி மாவட்டங்களில் இருந்து சின்ன வெங்காய வரத்து அதிமாக உள்ளது. இம்மாத இறுதியில் கோவை மாவட்டத்திலும் இதன் வரத்து அதிகரிக்கும். அடுத்த மூன்று மாதம் சின்ன வெங்காயத்தின் விலை, குவிண்டாலுக்கு 1,900 ரூபாய் முதல் 2,400 ரூபாய் வரை இருக்கலாம் என ஆய்வில் தெரிய வந்துள்ளது. எனவே, சின்ன வெங்காயத்தை இருப்பு வைக்காமல் உடனே விற்று லாபம் சம்பாதிக்கலாம். பெரிய வெங்காயத்தின் ஏற்றுமதி தடை நீக்கப்பட்டால், சின்ன வெங்காயத்துக்கு கிலோவுக்கு இரண்டு முதல் மூன்று ரூபாய் வரை லாபம் கிடைக்க வாய்ப்பு உள்ளது.இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**புவி வெப்பமயமாதல் ஆலோசனை கூட்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2011,22:14 IST

கோவை : இயற்கை அமைப்பு சார்பில், புவி வெப்பமயமாக்கலுக்கு எதிராக நடக்கும், "தமிழக மாநாடு-2011' பற்றிய ஆலோசனைக் கூட்டம் சிங்காநல்லூர், எச்.எம்.எஸ்., சங்க அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்துக்கு, காந்தி பல்கலையின் முன்னாள் துணைவேந்தர் மார்க்கண் டன் தலைமை வகித்தார். பசுமை பாலு, இயற்கை சிதம்பரம் முன்னிலை வகித்தனர். இயற்கை ஆர்வலர்கள், சமுதாய அமைப்பினர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

**தேசிய தேயிலை கருத்தரங்கு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2011,22:01 IST

கோவை : கோவை, டீ வர்த்தக மையம் சார்பில், "சவுத் இந்தியன் டீ 2011' தேசியக்கருத்தரங்கு வரும் 26, 27ம் தேதிகளில் நடக்கிறது. குன்னூர், தேயிலை வாரியம் செயல் இயக்குனர் அம்பலவாணன் கூறியதாவது: ஆண்டுதோறும் கோவையில் நடக்கும் ஏலத்தில், 2.5 கோடி கிலோ டீத்தூள் விற்பனையாகிறது. தேயிலை ஏற்றுமதியாளர்கள் பலரும், கோவையை முக்கிய மையமாகக்கொண்டு இயங்கி வருகின்றனர்.தென் மாநிலங்களில் உற்பத்தியாகும் தேயிலை, வட இந்திய தேயிலைகளை விட தரம் குறைவானவை என்ற தவறான கருத்து நிலவுகிறது. அவற்றை விட, தென்னிந்திய தேயிலைகள் மேம்பட்டவை. தென்னிந்திய தேயிலைகளைப் பயன்படுத்துவோரின் எண் ணிக் கையை உயர்த்த கோவை டீ வர்த்தக மையம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, மத்திய அரசின் தேயிலைக் கழகத்துடன் இணைந்து கோவையில் "சவுத் இந்தியன் டீ 2011' தேசிய கருத்தரங்கு நடக்கிறது. கோவை ரெசிடென்சி ஓட்டலில் வரும் 26, 27 தேதிகளில் நடக்கிறது. டார்ஜிலிங், அஸ்ஸாம் உட்பட பல்வேறு பகுதியில் இருந்து 300க்கும் மேற்பட்டோர் பங்கேற்கின்றனர். இந்திய தேயிலைக் கழக தலைவர் தினேஷ்சர்மா கருத்தரங்கை துவக்கி வைக்கிறார். UPSAI (The united Planter's association of southern india), FAITTA (The federation of all india tea traders association) இணைந்து இக்கருத்தரங்கை நடத்துகின்றனர். முக்கிய நிகழ்வாக, "கோல்டன் லீப் இந்தியா அவார்ட்ஸ்' போட்டி நடத்தப்பட்டு விருது வழங்கப்படும். 60 முதல் 70 வகையான டீ தூள் வகைகள் கண்காட்சியில் வைக்கப்பட உள்ளன. இக்கருத்தரங்கு, தென்னிந்திய டீக்களின் தரம் மற்றும் சுவையை வெளிப்படுத்துவதாக இருக்கும். இவ்வாறு, அம்பலவாணன் தெரிவித்தார்.பேட்டியின்போது, சென்னை டீ வர்த்தக மைய தலைவர் ரகுராம்சிங், கோவை துணைத்தலைவர் ஆனந்த், கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள் சந்திரகாந்த், பன்சாலி, ஸ்ரீதரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**விவசாயிகள் பயிற்சி கூட்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2011,21:53 IST

ஊட்டி : குன்னூர் மேல் ஒடையரட்டியில் விவசாயிகள் பயிற்சி கூட்டம் நடந்தது.பயிற்சியில் வெள்ளை பூண்டு, நவீன சாகுபடி, காரட் பயிர் பாதுகாப்பு, பீன்ஸ் பயிர் பாதுகாப்பு உருளைக்கிழங்கு பயிர் பாதுகாப்பு, கவாத்து செய்தல், தரமான இலை பறித்தல், மண் பரிசோதனை செய்தல், தேயிலைக்கு உரமிடல் பயிர் பாதுகாப்பு குறித்து பயிற்சி செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டது. பயிற்சியில் தோட்டக்கலை உதவி இயக்குனர் குணசேகரன், உழவர் பயிற்சி நிலைய துணை வேளாண்மை அலுவலர் ராஜன், தமிழ்நாடு உதவி வேளாண்மை அலுவலர்கள் சுப்ரமணி, மூர்த்தி மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர். வேளாண்மை

பல்கலை கழக தோட்டக்கலை ஆராய்ச்சி மைய டாக்டர் சாந்தி பேசுகையில், ""பீன்ஸ் பயிரில் வெள்ளை ஈயை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு மில்லி பாஸ்போமிடான் மருந்தை தெளிக்க வேண்டும். அசுவினியை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மில்லி டைமீதோயேட் மருந்து கலந்து தெளிக்க வேண்டும்,"என்றார்.

**தேனி அருகே தெளிப்புநீர் பாசனத்தில் கீரைசாகுபடி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2011,22:14 IST

தேனி : தேனி உழவர்சந்தையில் கீரை விற்கும் விவசாயி பாலகுரு, தேனியில் இருந்து ஏழு கி.மீ., தொலைவில் மலையடிவாரத்தில் ஆறு ஏக்கர் நிலத்தில் இயற்கை முறையில் கீரை சாகுபடி செய்து வருகிறார்.

இதில் தெளிப்பு நீர் பாசனம் அமைத்து கீரை வளர்த்து வருகிறார். செயற்கை உரங்களோ, பூச்சி மருந்துகளோ பயன்படுத்துவதில்லை. பாலகுரு கூறியதாவது: கீரை விதை வெளி மார்க்கெட்டில் கிலோ 600 ரூபாய்க்கு விற்கிறது. தரமும் உறுதிப்படுத்த முடியவில்லை. நாங்கள் 15 ரூபாய் செலவில் தரமான கீரை விதைகளை உற்பத்தி செய்து விடுகிறோம். வீரிய ரக, உயர்ரக கீரைகளை நாங்களே விளைவிக்கிறோம். அதற்கு எங்கள் முன்னோர்கள் கற்றுக்கொடுத்த முறையினை பயன்படுத்துகிறோம். மல்லி, புதினா, கருவேப்பிலை மற்றும் 12 வகை கீரைகள் விளைவிக்கிறோம், என்றார். இவர் மனைவி கோதைநாச்சியார் கூறியதாவது: காலையிலிருந்து மாலை வரை வேலை செய்வோம். வெளி ஆட்களை கொண்டு வேலை செய்தால் கட்டுபடி ஆகாது. எனவே தெளிப்புநீர் பாசனத்தை அமைத்துள்ளோம் என்றார்.

**மூலிகை சாகுபடியை ஊக்குவிக்க தேசிய தோட்டக்கலை வாரியம் முடிவு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2011,22:13 IST

கம்பம் : மூலிகை சாகுபடியை ஊக்குவிக்க தேசிய தோட்டக் கலை வாரியம் முடிவு செய்துள்ளது. இதற்கென மாநில தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் தீவிர கவனம் செலுத்த கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். மருத்துவத்தில் மூலிகைகள் பயன்பாடு அதிகரித்து வருகிறது. மூலிகை சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு மத்திய, மாநில அரசுகள் பல உதவிகளை செய்கின்றன. பல மானிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. சாகுபடி செய்யும் மூலிகைகளை கொள்முதல் செய்யவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இருந்த போதும் தற்போது தேசிய தோட்டக்கலை

வாரியம் மேலும் பல சலுகைகளை வழங்க முடிவு செய்துள்ளது. தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கூறியதாவது: இந்தியாவின் மூலிகை தேவை 3.20 லட்சம் டன் என்று கணக்கிடப்பட்டுள்ளது. உலக மார்க்கெட்டில் மூலிகை வர்த்தகம் 3 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் நடக்கிறது. இந்தியாவில் இருந்து 1, 250 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் வனப்பகுதிகளில் மூலிகை சாகுபடிக்கு திட்டமிடப்பட்டுள்ளது. வனத்துறையினருடன் சேர்ந்து மூலிகை சாகுபடியை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. தோட்டக்கலைத்துறை அதற்கான பணிகளில் இறங்கியுள்ளது. மேலும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களையும் இந்த பணியில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஆர்வமுள்ளவர்களுக்கு மூலிகை சாகுபடிக்கு தேவையான நர்சரி, சாகுபடி முறைகள், மானிய உதவி, மார்க்கெட்டிங் போன்ற வசதிகள் செய்து தரவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக விரிவான அறிவிப்புகள் விரைவில் தோட்டக்கலைத்துறை சார்பில் வெளியிடப்படும், என்றனர்.

**நெல் விவசாயிகளுக்கு... மன உளைச்சல் : கொள்முதல் நிலையங்களில் "படாதபாடு'**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2011,22:26 IST

சிவகங்கை : அரசு நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளை புறக்கணித்து, வியாபாரிகளுக்கு முன்னுரிமை அளிப்பதாக, புகார் எழுந்துள்ளது. மாவட்டத்தில் 32 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. "இங்கு கொண்டு வரப்படும் நெல்லுக்கு உரிய பாதுகாப்பு இல்லை; ரசீது வழங்கப்படுவது இல்லை; எடை போடாமல் இழுத்தடிக்கின்றனர்' என, விவசாயிகள் புகார் பட்டியல் வாசிக்கின்றனர். இதுகுறித்து விவசாயிகளின் குமுறல்கள்: காந்தி (சிவகங்கை): நெல் மூடைகள் வைக்க உரிய இடம் இல்லை. கீழே அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இதனால் கரையான் அரிக்கிறது. மழையால் நெல் முளைத்து விடும். ஆடு, மாடுகள் சாப்பிட்டு விடுகின்றன. எடை போட பல நாட்கள் காத்து கிடக்க வேண்டியதுள்ளது. வெயிலில் காய்வதால் நஷ்டம் ஏற்படுகிறது. ஜெயம் (சிவகங்கை): கடந்த 17 நாட்களுக்கு முன், 20 மூடை நெல் கொண்டு வந்தேன். அதற்கு ரசீது வழங்கப்படவில்லை. வெயிலில் கிடப்பதால் ஈரப்பதம் குறைந்து எடை குறைகிறது. பாதுகாப்பு இல்லாததால் அரை மூடை நெல்லை மாடு தின்று விட்டது. அதிகாரி ஒருவர் கூறுகையில், ""முன்பதிவு அடிப்படையில் எடை போடுகிறோம். நெல்லில், 17 சதவீதம் ஈரப்பதம் இருந்தால் மட்டுமே எடுத்து கொள்வோம். தினமும் 600 மூடை எடை போடுகிறோம். மூன்று மணி நேரம் மின் தடை ஏற்படுகிறது. சிவகங்கையில் சுற்று சுவர் இல்லாததால் கால்நடைகள் வந்து விடுகின்றன. வியாபாரிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை,'' என்றார். திருப்புவனம்: திருப்புவனம், லாடனேந்தல், கொந்தகை, திருப்பாச்சேத்தியில் கொள்முதல் மையங்கள் உள்ளன.

நெல்லை தூற்றவும், இறக்கு கூலி எனவும் மூடைக்கு 13 ரூபாய் வசூலிக்கப்படுகிறது. பணம் தர மறுக்கும் விவசாயிகளை, காக்க வைப்பதாக புகார் எழுந்துள்ளது. வியாபாரிகள், அதிகாரிகள் கூட்டணியாக செயல்படுகின்றனர். அடாவடி வசூலை தடுக்க கலெக்டர் சம்பத் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## *நடப்பு பருவத்தில் இதுவரை இந்தியாவில் சர்க்கரை உற்பத்தி 1.34 கோடி டன்னாக அதிகரிப்பு*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*நடப்பு பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) இதுவரை, இந்தியாவில் சர்க்கரை உற்பத்தி 1.34 கோடி டன்னாக அதிகரித்துள்ளது. இது, முந்தைய பருவத்தின் இதே காலத்துடன் ஒப்பிடும்போது 16 சதவீதம் (1.15 கோடி டன்) அதிகமாகும்.*
*பயன்பாடு*
*முந்தைய முழு சர்க்கரை பருவத்தில் நாட்டின் சர்க்கரை உற்பத்தி 1.90 கோடி டன்னாக இருந்தது. இது நடப்பு பருவத்தில் 2.45 கோடி டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பயன்பாடு 2.20 கோடி டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே உபரி சர்க்கரையை தாராளமாக ஏற்றுமதி செய்ய*

முடியும். இந்நிலையில் கட்டுப்பாடற்ற வகையில் சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி அளிப்பது குறித்து மத்திய அரசு ஆலோசித்து வருகிறது.

உலக அளவில் கரும்பு மற்றும் சர்க்கரை உற்பத்தியில், தென் அமெரிக்க நாடான பிரேசில் முதலிடத்தில் உள்ளது. இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. எனினும் சர்க்கரை பயன்பாட்டில் இந்தியாவே முதலிடத்தில் உள்ளது. உலகம் முழுவதுமாக 110-க்கும் மேற்பட்ட நாடுகளில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. உலகின் மொத்த கரும்பு உற்பத்தியில் பிரேசில் மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளின் பங்களிப்பு 50 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்று மாநிலங்கள்

நம் நாட்டில் கரும்பு உற்பத்தியில் மகாராஷ்டிரா, உத்தரபிரதேசம், கர்நாடகம் ஆகிய மாநிலங்கள் முன்னிலை வகிக்கின்றன. நாட்டின் மொத்த கரும்பு உற்பத்தியில் இந்த மூன்று மாநிலங்களின் பங்களிப்பு 70 சதவீதமாகும். மகாராஷ்டிரா மற்றும் உத்தரபிரதேசத்தில் கரும்பு அரவை பருவம் ஏப்ரல் மாதத்துடன் நிறைவடைகிறது. நடப்பு பருவத்தில் இந்த மாநிலங்களில் கரும்பு பயிரிடும் பரப்பளவு அதிகரித்துள்ளதாக தெரிகிறது. இதனால் கரும்பு விளைச்சல் நடப்பு பருவத்தில் 35 கோடி டன்னை எட்டும் என ஏற்கனவே ஒரு மதிப்பீடு வெளியாகி உள்ளது. சென்ற 2009-10-ஆம் சர்க்கரை பருவத்தில் 27 கோடி டன் கரும்பு உற்பத்தியாகி இருந்தது. கரும்பு விவசாயிகள் ஈட்டிய வருவாய் கடந்த 2007-08-ஆம் பருவத்தில் ரூ.29,000 கோடியாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது நடப்பு பருவத்தில் அவர்கள் ஈட்டும் வருவாய் இரண்டு மடங்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.